# பஞ்சபூதங்கள் நோக்கில் சித்தர் இலக்கியமும் மருத்துவமும்

**பேரா.பெ.காளியானந்தம் [1] & முனைவர் கா.கணநாதன் [2]**

**[1]பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் & [2] இணைப்பேராசிரியர்,**

**தமிழ்ப்பண்பாட்டு மையம்,**

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி,சிவகங்கை மாவட்டம்.**

kaliyanantham@gmail.com

44

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனுக்குள்ளே உள்ள ஐவகை உணர்வுகளின் அடிப்படையான இயற்கை பொருட்களையே ஐந்து வகை பூதங்களாக பகுத்தனர் நம் பெரியவர்கள். எனவே, உலகத்தில் உள்ள அனைத்து பொருட்களுமே ஐம்பூதங்களால் ஆனவையே. வையத்துள் கொட்டிக் கிடக்கின்ற இயற்கை வளங்களுக்கு மூலங்களாக உள்ளவை ஐம்பூதங்களே. 5 பூதத்தில் ஆளுகை தான் இறையாண்மை. இதனையே இறைவனாக பூசித்து, போற்றி மகிழ்ந்தனர் நம் முன்னோர்கள். உலகத்தை ஆராய்ச்சி செய்த மெய்ஞானிகளெல்லாம், மெய்ஞானம் எல்லாம் இயற்கையில் இருந்தே பிறந்திருக்கின்றன. பஞ்சபூதங்கள் அவற்றின் கலப்பாக உலகில் வாழும் உயிரினங்கள் எல்லாம், நம் உயிர்கள் எல்லாம் இறைமை என்ற சக்தியால் இயங்குகின்றன.

**திறவுச் சொற்கள்:** சித்தர்கள் - இலக்கியங்கள் - நீர் - காற்று - நெருப்பு - ஆகாயம் - நிலம் - மருத்துவம்

**முன்னுரை**

இந்த உலகம் பஞ்சபூதங்களை அடங்கியுள்ளது. நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், நிலம் கொண்டது ஐந்து என்பதுதான் ஒரு வித உலக சூட்சுமம். நம் உடலில் உள்ள எலும்பு, சதை, ரத்த ஓட்டம், நரம்பு செயல்பாட்டுக்கு பஞ்சபூத தத்துவம் உள்ளே வேலை செய்வதால் தான் அனைத்து உடல் மூலக்கூறுகளும் சீராக வேலை செய்யும். பஞ்சபூத அடிப்படை தத்துவங்களே மனித உடலில் மட்டுமல்லாது, தாவரங்கள், விலங்குகள் மற்றும் அனைத்து பிரபஞ்ச சக்திக்கும் தேவைப்படும் ஒரு மூலக்கூறாகும். இந்த பஞ்சபூதக் கலவையானது ஒவ்வொரு பொருளிலும், உயிரிலும் தனித்துவமான விதத்தில் கலந்து இருக்கிறது. சித்தர்கள் தங்களுடைய நூல்களில் இயற்கையின் அமைப்பை ஆராய்ந்து கண்டுள்ளனர். ஐந்து பூதங்களை பற்றிய சில அடிப்படை உண்மைகளை நமக்கு கூறியிருக்கின்றனர். அத்தகைய ஐம்பூதங்கள் என்ன என்பதையும், அவற்றின் மருத்துவ குணங்களையும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சித்தர்கள் விளக்கம்**

சித்தர்கள் என்பவர்கள் அறிவுடையவர்கள், நிறைமொழி மாந்தர்கள். "அறிஞர்கள்" என்பது பொருள். சித்தர்கள் மருத்துவம், யோகம், ஜோதிடம், மந்திரம், ரசவாதம் போன்ற அறிவியல்களைத் தந்தவர்கள். இறைவனை நேசித்தவர்கள். சித்தர்கள் பின்பற்றிய வழி அன்பு நெறி. சித்தர்கள், கடவுள் வெளியில் இல்லை, நம் உள்ளத்தில் நிறைந்திருப்பவன் என்று வலியுறுத்தியவர்கள்.

**சித்தர்களின் கருத்துச் செறிவு**

சித்தர்கள் மிக ஆழமான கருத்துக்களை, பாமர மக்களும் புரியும் வண்ணம், தம் உணர்ந்தவற்றை எளிய தமிழில் உணர்த்தியவர்கள். பாடலைப் படிக்கும் போது மேலோட்டமான ஒரு பொருளும், உள்ளார்ந்து ஒரு பொருளும் அமையப் பாடியுள்ளனர். சித்தர் இலக்கியங்களில், மற்ற இலக்கியங்களில் உள்ளதைப் போல சொல், பொருள், நயம் மிகுதியாக காணப்படுகின்றன. சான்றாக, சிவவாக்கியர் பாடல் ஒன்று:

**“ஐந்து எழுத்தில் பிறந்து, அஞ்சு எழுத்தில் வளர்ந்து**
**அஞ்சு எழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகள்**
**ஐந்து எழுத்தில் ஓர் எழுத்து அறிந்து கூற வல்லீரேல்**
**அஞ்சல், அஞ்சல் என்று நான் அம்பலத்தில் ஆடுமே”** (சிவவாக்கியர் பாடல் 18)

என்னும் இப்பாடலில் வரும் "அஞ்சு எழுத்து", பஞ்சபூதத்தில் கோட்டாகிய இவ்வுலகம் தோன்றுவதற்குக் காரணம் ஐந்து என்றும், "சொல்" பஞ்சாக்கரத்தைக் குறிக்கும். பஞ்சபூதங்களில்மொத்த உருவமே ஒரு பிரபஞ்சம் என்கிறது உபநிடதம். உலகில் படைப்புக்கு அடிப்படை இந்த நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்றும், பஞ்சபூதங்கள் ஆகும். இதே போல, மனித உடலும் ஐம்பூதங்களால் ஆன சிறிய பிரபஞ்சம் என்கிறார்கள் சித்தர்கள். இதைத்தான் திருமூலர்,

**“அண்டத்தில் உள்ளது பிண்டம்**
**பிண்டத்தில் உள்ளது அண்டம்**
**அண்டமும் பிண்டமும் ஒன்று**
**அங்குதான் பார்க்கும்போது”**

என்று குறிப்பிடுகிறார்.

**“பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம்**
**தரமாறில் தோன்றும் பிறப்பு”**

என்கிறார் அவ்வையார்.

**"வழி விசைப்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலால்"**

என்கிறது தொல்காப்பியம் (தொல். மரபியல் 635).

**"ராகு பிறந்ததும் ஐம்பூதங்களும் புதுப் பொலிவு எய்தின"**

என்கிறார் மகாகவி காளிதாசர்.

**"மண் தெளிந்த நிலமும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வலியும்**
**வழி தலைஇய தீயும்**
**தீ முரணியை நீரும்"**

என்றாங்கு, ஐம்பெரும் பூதத்து இயற்கை உரம் இரண்டு. இவை ஐந்தும் வாழ்க்கைக்கும், வாழ்வு ஆதாரத்திற்கும் இன்றியமையாதவை. அதனால் தான் சித்தர்கள் இந்த உடலை ஒரு கோயில் என்றும், இதனுள் உறையும் ஆத்மாவை இறைவன் என்றும் கூறினார்கள்.

**திருமூலர் கூறும் நோய்களும் தீர்வுகளும்**

இன்று எங்கு பார்த்தாலும் நோய்தான். நோயின்றி வாழ்தலே வாழ்வின் பெரும் சிறப்பாகும். சித்தர்கள் கூறிய மருத்துவத்திலிருந்து இன்று நாம் பல லட்சம் செய்யும் ஆங்கில மருத்துவத்திற்குச் சென்று விட்டோம். சித்தர்கள் கூறும் மருத்துவம் எளிமையானது. எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று சொல்லி வைத்தார்கள். சித்தர்கள் மனித உடலுக்கும் அதைச் சூழ்ந்துள்ள இயற்கைக்கும் இந்த பிரபஞ்சத்திற்கும் உள்ள தொடர்பினைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தனர். உடலில் வரும் பாதிப்புகள் பஞ்சபூத சமநிலை இன்மையால் வருவது ஆகும். இந்த பஞ்சபூதங்கள் ஸ்தூல வடிவாக உடலாக கருதப்படும். அதே வேளை, பூரண உடலிலும் ஆறு ஆதாரங்களாகப் பரிணமித்துள்ளது.

**பஞ்சபூதங்களும் ஆதாரங்களும்:**

- **பிருத்வி –** பூமிபூதம் (மூலாதாரம்)
- **அப்பு –** நீர் பூதம் (சுவாதிஷ்டானம்)
- **தேயு –** தீ பூதம்
- **ஆகாயம் –** பூதம் (சுத்தி மணிபூரகம்)
- **மனம் –** சித்தி

இதில் ஒவ்வொரு பூதத்தின் குறைபாடுகள் அந்த ஆதாரங்களில் சக்தி குறையும் போது சூட்சும உடலில் உருவாகி, நீண்ட காலத்திற்குப் பின்னர் உடலுக்கு வரும். இந்த அடிப்படையிலேயே ஒரு சித்த வைத்தியர் தனது சிகிச்சையினைச் செய்ய வேண்டும். மேலே கூறிய ஐம்பூதங்களுக்கும் உடலில் உள்ள ஆதாரத்திற்கும் உள்ள தொடர்பினைப் பார்த்தீர்களானால், ஆறாவது ஆதாரம் ஆக்ஞா ஆதாரத்துடன் தொடர்புபட்டுள்ளது. மனம் என்பதே மனிதன் இந்தப் பிரபஞ்சத்துடனும் ஐம்பூதங்களுடனும் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சாதனம். இது திருமூலர் கூறிய ஒரு எளிய

தியானப் பயிற்சி முறையாகும். சித்தர்களின் பாகுபாட்டில் மனிதனுக்குத் தோன்றக்கூடிய வியாதிகள் **4,448** ஆகும். இதற்கு மேல் எந்த வியாதியும் இல்லை. இன்று ஆங்கிலப் பெயரிட்டு அழைக்கப்படும் பல்லாயிரக்கணக்கான வியாதிகளும் இவற்றுள் அடங்கிவிடும். இந்தப் பயிற்சியால் **4,448** நோய்களும் இல்லாது போய்விடும் என்பது திருமூலர் வாக்கு. இந்த சாதனை பற்றிக் கூறும் பாடல்:

**"எட்டு மாதம் வியாதியும் மாதமடிந்திடும்**
**காலம் குழந்தையாம் பார் புருவ மையத்தின்**
**மூலம் மரத்தை மூட்டு கண் மூக்கிலே" (திருமூலர் ஞானகுரு – 30, பாடல் 14)**

**பொருள்:** மனதினை கண்ணும் மூக்கும் சந்திக்கும் மூட்டில், அதாவது புருவ மத்தியில் வைத்து தியானித்து வர **4,448** வியாதிகளும் மடிந்து, குழந்தையைப் போன்று இளமை தோன்றும் என்கிறார்.

**சித்த மருத்துவக் கோட்பாடு**

சித்த மருத்துவக் கோட்பாடு ஐம்பூதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்த உலகம் ஐம்பூதமயமானது. இந்த உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் அவற்றால் உருவானவை. மனித உடலும் உடல் உறுப்புகளும் ஐம்பூதங்களை ஆதாரமாகக் கொண்டு உருவானவை. உடலில் தோன்றும் நோய்களுக்குக் காரணமாக அமைவதும், நோய்களைத் தீர்க்கும் மருந்துப் பொருள்களும் பஞ்சபூதங்கள் சேர்க்கையினாலேயே உருவாகின்றன. இயற்கையாகத் தோன்றிய பஞ்சபூத முறைக்கு மாறாக அமையும் மருந்துகள் பயன் தர மாட்டா என்னும் கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கப் பெற்றதாகும்.

**பஞ்சபூதம்**

பஞ்சபூதம் என்பது நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் என்னும் ஐந்தாகும். இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாவிட்டாலும் அல்லது குறைந்தாலும், உயிர்கள் தோன்றவும் வாழவும் வழியில்லை. உயிர்கள் தோன்றவும் உய்யவும் காரணமாக அமைவது பஞ்சபூதமாகும். **"நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"** (*தொல்காப்பியம் – மரபியல்*). இந்த உலகம் பஞ்சபூதங்களின் கலவையால் உருவானது என்று தொல்காப்பியம் உரைக்கின்றது.

**உலகமும் பஞ்சபூதமும்**

உலகம் பஞ்சபூதங்களின் கலவையினால் உருவாகி இருப்பதைப் போல, நில உலகில் உருவாகி இருக்கும் பொருள்களும் பஞ்சபூதங்களின் கலவையால் அல்லது சேர்க்கையால் உருவானவை. பஞ்சபூதங்களின் தொகுதியே உயிரினங்களை உருவாக்கின என்பதால், உயிர்த்தோற்றத்திற்கு பஞ்சபூதங்களே ஆதியாக அமைவது எனத் தெரிய வருகின்றது.

**"வாரணங்களுக்கும் ஐந்து பூதம்**
**மறுபெயர் தேவதைக்கும் ஐந்து பூதம்**
**தாரான அண்டமெல்லாம் ஐந்து பூதம்**

**சதாசிவமாய் நின்றதும் ஐந்து பூதம்**
**கூரான யோனி எல்லாம் ஐந்து பூதம்**
**குறும்பனை ஐந்தினால் எல்லாம் ஆச்சு"**

என்று சட்டை முனிநாதர் உரைக்கின்றார். ஐம்பூதங்களால் உருவானவை மனிதர் மட்டுமல்ல; தேவதைக்கும் அவைதான், சதாசிவமாய் நின்ற தெய்வத்துக்கும் அவைதான். உயிரினங்கள் அனைத்துக்கும் அவைதான். அவற்றால் தான் அனைத்துமே உருவாகிவிட்டது என்று தெளிவுபடுத்துவர். உயிரினங்கள் பஞ்சபூதங்கள் அல்லாமல் வேறு முறையில் உருவானவை அல்ல என்பதே இதன் அடிப்படைக் கருத்து. ஒரு பொருளின் மூலத்தைக் கண்டு உரைப்பது போல, உயிரினங்கள் அனைத்திற்கும் மூலமாய் நிற்பது பஞ்சபூதங்கள் என எண்ணினர்.

**பஞ்சபூதங்களின் பிறப்பு**

பஞ்சபூதங்கள் எங்கு உள? எங்கு இருந்து? என இல்லாமல், எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும் நிறைந்து இருக்கின்றன. எந்த இடத்தில் பூதங்கள் அனைத்தும் இல்லையோ, அந்த இடத்தில் உயிரினங்களும் அவற்றின் பிறப்பும் இல்லை என்ற கருத்து உறுதிப்படுவதற்கு ஔவை குறள் கூறும் கருத்து சான்றாகும். பூதங்கள் எல்லாம் ஒரே அளவில் இருந்தால், அங்கு பிறப்பில்லை. அவை பங்குபெறும் அளவு மாறினால், உயிர் உண்டாகும் என்பது ஔவையின் கருத்தாகும். பூமி போன்ற கோள்களும், விண்மீன், சூரியன் போன்ற ஒளியன்களும் சுழன்று கொண்டிருக்கும் அந்த கோளம் என்னும் வான் வழியாகிய எங்கும் நிறைந்திருப்பது பஞ்சபூதங்கள் என்பதே அடிப்படைக் கருத்தாக கூறக் காணலாம்.

**பஞ்சபூதமும் உடம்பும்**

உடம்பை ஆட்சி செய்வது பஞ்சபூதமாகும். பஞ்சபூதம் அளவில் ஒன்று மாறினாலும் உயிருக்குக் கேடு வந்து விடும் என்பது சித்த மருத்துவக் கோட்பாடு. அண்டத்தில் இயங்குகின்ற ஆற்றல்கள் அனைத்துக்கும் இதே நிலைதான் என்று பொதுவிதி கூறப்படுகிறது. அண்டத்துக்கு வேறு, பிண்டத்துக்கு வேறு என்னும் பாகுபாடு இயற்கை நிலையில் இல்லை என்பதை உணர்த்துவது சித்த மருத்துவக் கோட்பாட்டின் அடிப்படை கருத்து என்பதை,

**"அண்டத்தில் உள்ளது பிண்டம்**
**பிண்டத்தில் உள்ளது அண்டம்**
**அண்டமும் பிண்டமும் ஒன்றே**
**அறிந்து தான் பார்க்கும் போதே"** ***(திருமூலர்)***

என்று சற்றுமுனை ஞானம் உரைக்கக் காணலாம்.

**பஞ்சபூதமும் உடல் உறுப்பும்**

பஞ்சபூதம் உடலை உருவாக்குகின்றது என்பது பொதுவாக கூறப்படும். பஞ்சபூதங்கள் உடம்பில் உறுப்புகளாக அமைந்துள்ளன என்பதை விளக்குவது, சித்த மருத்துவக் கோட்பாடுகளின்படி, கொள்கை மருத்துவ நூலால் உடல் உறுப்புகளை நுண்ணீரின் உணர்ந்ததன் பயனாகவே இவ்வாறான கொள்கையும் கோட்பாடும் உருவாகி இருக்கின்றன.

**உடல் உறுப்புக்களும் பஞ்சபூதங்களின் கூறுகளும்**

**மண்** – எலும்பு, தோல், இறைச்சி, நரம்பு, மயிர்

**நீர்** – உதிரம், மஞ்சள், உமிழ்நீர், நிலம், விந்து

**தீ** – பயம், கோபம், அகங்காரம், சோம்பல், உறக்கம்

**காற்று** – போதல், வருதல், நோய்படுதல், ஒடுங்குதல், தொடுதல்

**ஆகாயம் –** ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை

என்னும் **25** பஞ்சபூதத்தின் கூறுகளால் உடம்பில் அமைந்திருக்கின்றன என்பர் சித்தர்கள். இதனோடு ஒத்த கருத்தை சங்ககால இசையன் உள்ளார் நூலான **பஞ்ச மரபு** கூறுகின்றது.

**பஞ்சபூதங்களில் தன்மையும் மருந்தும்**

பஞ்சபூதங்களின் இயல்பான தன்மைகளை எண்ணியே, உலகப் பொருள்களில் பஞ்சபூதங்கள் இடம்பெற்று இருக்கும் அளவைக் குறிப்பதாக சித்த மருத்துவம் கருதுகின்றது. பஞ்சபூத அளவின்படி மருந்துகள் அமைந்து இருந்தால், இயற்கையான ஆற்றல் உடைய பண்பினைப் பெறும் என்னும் கருத்து சித்த மருத்துவத்தில் காணப்படுகிறது. பஞ்சபூதத்தின் குணம் அறியாமல் மருந்து செய்தால், அதனால் பயன் இல்லை என்றும் கூறப்படுகிறது.

**"அஞ்சு பஞ்ச பூதம் அறிந்தால் அனித்தியம்போம்"**

என்று திருவள்ளுவர் ஞானம் உரைக்கின்றது.

பஞ்சபூதத் தன்மையைப் போல மருந்துகள் கூட்டப்பட்டால், மருந்துகள் மரணத்தை வெல்லச் செய்யும். பஞ்சபூதங்கள் நிலைத்திருப்பதைப் போல, மனித உடலையும் நிலைத்திருக்கச் செய்யும் என்பது இதன் கருத்தாகக் கொள்ளலாம்.

**"பஞ்சபூதம் ஒன்று கூடி பளிங்கி போல கீதமம்**
**விஜயும் ஒன்றே வழங்கி விளையும் பூமி நாதமே**
**நஞ்சதாகும் நாத நீரில் நாட்டு தோஷம் காற்றினில்**

**பஞ்சு போல பறந்தது போகும் பாட்டை சொன்னேன் ஆண்டையே"**

என்று கூறுவர்.

**"பூ நெல்லி நீர்மிளகு பொற்கடுக்காய் வான் மஞ்சள்**
**கானகத்து வேம்பரிசி காரிகையே மானக்கேள்**
**ஒன்றரை ஒன்றேகால் ஒன்று உறுதி முக்கால்**

**கன்றரைக்கை யான் நீரில் தேய்"** (*மீ பா சோமு சித்தர் இலக்கியம் – முதல் பகுதி*) என்னும் மருத்துவப் பாடல், நெல்லிக்காய், மிளகு, கடுக்காய், மஞ்சள், வேம்பரிசி என்னும் மருந்துப் பொருள்கள் முறையே மண், நீர், தீ, காற்று, ஆகாயம் எனக் கூறுவதுடன், **6, 5, 4, 3, 2** என அளவுகளைக் குறிப்பிடுகிறது. பஞ்சபூதங்களில் குணங்கள்: **மண் – 5, நீர் – 4, காற்று – 3, தீ – 2, ஆகாயம் – 1.** இந்த விகிதத்தில் இருக்கின்றன என்று மேலே குறிப்பிடப்பட்டது. இதன் அடிப்படையில், மருந்துப் பொருட்கள் கூட்டப்படுகின்றன என்பது கருதத்தக்கது. மனித உடலில் அமைந்திருக்கும் **வாதம், பித்தம், கபம்** ஆகிய **மூன்று நாடிகள்** சிறப்பானவை. இந்த மூன்று நாடிகளைக் கொண்டு, உடம்பில் உருவாகி இருக்கும் அல்லது பிணித்திருக்கும் நோய்கள் கண்டறியப்படுகின்றன. இந்த மூன்று நாடிகளும் **மூன்று பூதங்களின் கூறுகளாகச் செயல்படுகின்றன: வாதம் – காற்றின் கூறாகவும், பித்தம் – தீயின் கூறாகவும், கபம் – நீரின் கூறாகவும்** குறிப்பிட்டிருக்கின்றன.

**பஞ்சபூத மரபு**

இன்றைய உலகில் சிறந்த தொன்மையான மருத்துவங்களில் ஒன்றாக விளங்குவது சித்த மருத்துவம். இந்த மருத்துவத்தைத் தோற்றுவித்தவர்கள் சித்தர்கள். சித்த மருத்துவம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது பஞ்சபூதம். பஞ்சபூதத்தின் தன்மையை அறிந்த பிறகு, சித்த மருத்துவக் கோட்பாடு முறையில் அமைந்திருக்க வேண்டும். பஞ்சபூதம் ஒன்றுடன் ஒன்று கலந்து, உயிர்கள் மற்றும் உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் தோன்றின. அவ்வாறு தோன்றிய உயிர்ப்பொருள்களும் பஞ்சபூதங்களின் கூறுகள் ஆகும். உயிரும் பொருளும் தோன்றவும், காக்கவும், நிலைக்கவும், அழிக்கவும் செய்வது பஞ்சபூதமாகும். இதுவே பஞ்சபூதக் கோட்பாடு. கோட்பாட்டினைப் பின்பற்றி தொடர்ந்து மேற்கொண்டு வரும் இனத்தவரை பஞ்சபூத மரபினர் எனலாம். அத்தகைய மரபினைக் கருதத்தக்கவர்கள் சித்தர்கள். பஞ்சபூதக் கோட்பாடு உருவாகிய காலத்தை "சித்தர் காலம்" எனவும், சித்த மருத்துவத்தின் தொடக்க காலம் எனவும் கொள்ளத் தோன்றுகிறது.

**பஞ்சபூதங்களை பற்றிய சிந்தனை**

தொல்காப்பிய காலத்துக்கும் முந்தியது, கடல் கோளாறால் அழிந்த இரண்டாம் தமிழ்ச் சங்க நூல்களில் ஒன்று பஞ்சபூதக் கோட்பாட்டை விவரிப்பதாக இருந்திருக்கின்றது. **பூதபுராணம் 30** என்னும் நூல் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தைய நூலாக இருக்கலாம், அல்லது பூதக் கோட்பாட்டு அறிவு தொல்காப்பியர் காலத்துக்கு முன்பதாக இருக்கலாம். அதனால்தான் தொல்காப்பியம், **"பஞ்சபூதங்களால் உலகம் உருவானது"** என்று உரைக்கிறது. தொல்காப்பியர் காலத்து தமிழர் **"உயிர் அழியாது என்றும் நிலைத்திருக்கக் கூடியது"** என்றும் கருத்து ஒளிபரப்பாக இருந்திருக்கின்றனர். உயிர்கள் என்றும் அழிவில்லையென்பது தமிழர் கொள்கை. உயிர்கள் என்றும் நிலைபெறுவது காரணமாகவே, அவற்றை **"மன்னுயிர்"** என வழங்குதல் தமிழ் வழக்கு.

பழைய வழக்கினை **"தொல்லுயிர்"** என்ற தொடரால் தொல்காப்பியர் உடன்பட்டு வழங்கியுள்ளார். இந்த கருத்துக்கு உரிமை உள்ளவர்கள் சித்தர்களே. சித்தர்களே, மருத்துவ முறையால் உடல் அழியாமல், உயிரை பாதுகாக்க முடியும் என்று கூறியவர்கள்.

**"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே."**

என்று திருமூலர் கூறுவதன் மூலம் அறியலாம். சித்தர்கள் கூறிய இந்தக் கருத்தை மெய்ப்பிக்கும் அடிப்படையாக இருப்பது சித்த மருத்துவத்தில் பஞ்சபூதக் கொள்கையாகும். பஞ்சபூதம் பற்றிய கருத்து மருத்துவத்தில் மட்டுமல்லாது தொல்காப்பியம், புறநானூறு, பரிபாடல், சிறுபஞ்சமூலம் போன்ற சங்ககால நூல்களிலும் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற **"பஞ்ச மரபு"** என்னும் இசை நூல் பஞ்சபூதங்களை விவரிக்கிறது. தென்னாட்டில் அமைந்திருக்கும் சைவத் திருக்கோயில்கள் – காஞ்சி (மண்), திருவானைக்கா (நீர்), திருவண்ணாமலை (தீ), திருக்காளத்தி (காற்று), சிதம்பரம் (ஆகாயம்) ஆகியவை முறையே பஞ்சபூதங்களை குறிக்கின்றன. இதன்மூலம் பூதங்களின் தாக்கம் கோயில்களிலும், மதங்களிலும் இடம்பெற்றுள்ளது என்பதைக் காணலாம். திருவண்ணாமலை பற்றிய செய்தி அகநானூறு, நற்றிணை ஆகிய இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதால், அக்கோயில் சங்க காலத்தில் ஏற்பட்டது என்று கூறலாம். பஞ்சபூதங்களைப் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களிலும், சைவத் திருக்கோயில்களிலும் காணப்படுவது போல வேறு இடங்களில் காணப்படவில்லை. எனவே, பஞ்சபூதக் கொள்கை தமிழகத்துக்கு மட்டுமே உரியது எனலாம். பஞ்சபூதங்களை அடையாளமாகக் கூறும் சைவக் கோயில்களிலும், வேறு சிலர் சித்தர்கள் சமாதி அடைந்ததாக கூறுவர். பழமையான சைவக் கோயில்களில் சித்தர் சமாதி இருப்பதைக் கொண்டு, சித்தர்களுக்கும் சைவ கோயில்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பது தெரியவரும். சைவ மத மரபு, சித்த மருத்துவ மரபு, சித்தர் மரபு ஆகியவை பஞ்சபூதத்துடன் தொடர்பு உடையவையாக காணப்படுகின்றன. இதனால், மேற்கண்ட மரபுகள் பஞ்சபூத மரபின் விரிவாகவோ, தொடர்ச்சியாகவோ கொள்ளலாம். பஞ்சபூத மரபின் தோற்றம் இடைச்சங்க காலத்தில் இருந்து தொடங்குவதால், அது இன்றைக்கு சுமார் **5,000** ஆண்டுக்கு முற்பட்டது எனலாம். அதுவே சித்தர் காலமாகவும், சித்த மருத்துவ காலமாகவும் கொள்ள ஏதுவாக அமைகிறது. பஞ்சபூத மரபே சித்தர் மரபு எனவும், சித்தர் மருத்துவ மரபு அல்லது சித்த மருத்துவ கோட்பாடு எனவும் கொள்ளும் கருத்தும் இறுதியாகிறது.

**தொகுப்புரை**

இயற்கையை வழிப்படுதலே மனித குலத்தின் முதன்மையாக இருந்திருக்கிறது. இயற்கை எல்லா வளங்களையும் வாரி வாரி வழங்குகிறது. மனிதனுக்குள்ளே இயங்கும் ஐந்து வகை

உணர்வுகளின் அடிப்படை இயற்கைப் பொருள்களாகிய ஐந்து வகைப் பூதங்களே ஆகாயம், நிலம், நீர், நெருப்பு மற்றும் காற்று என்பதை அறிய முடிகிறது.

சித்தர்கள் மனிதர்களின் உயிர் இயக்கத்திற்கும் இயற்கையின் ஐம்பூதங்களுக்கும் உள்ள தொடர்பினை தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும் உலகிலுள்ள மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு இயற்கை வழியே ஐம்பூதத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட மருந்து வகைகளை கண்டறிந்து அவற்றின் நன்மைகளையும் விளக்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. சித்தர்களைப் போற்றுவோம்! ஐம்பூதங்களைப் போற்றுவோம்!

**துணை நின்ற நூல்கள்**


1. ப. அருணாச்சலம் - திருமந்திரக் கோட்பாடு, முல்லை நிலையம், சென்னை, 2002.
2. சாமி. சிதம்பரனார் - சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்.
3. சி. எஸ். முருகேசன் - பதினெட்டு சித்தர்கள் வரலாறு, குறிஞ்சி பதிப்பகம், சென்னை, 2006.
4. முனைவர் - சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், வர்த்தமான் பதிப்பகம், சென்னை, 2007.
5. இணையம் - விக்கிப்பீடியா.